செய்தி வெளியீடு எண்:126 நாள் :26.03.2015

செய்தி வெளியீடு

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் வளர்ச்சி பணிகள் குறித்து ஆய்வு**

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தலைமையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் மாநில அளவிலான வளர்ச்சிப் பணிகள் ஆய்வுக் கூட்டம் 26.03.2015 அன்று சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் தமிழ்நாடு குக்கிராமங்கள் கட்டமைப்பு மேம்பாட்டுத் (தாய்) திட்டம், ஊரக குடியிருப்பு திட்டங்களான முதலமைச்சரின் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம், இந்திரா நினைவு குடியிருப்பு திட்டம், “தானே” வீடு வழங்கும் திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுதல், ஊரக சாலை பணிகள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் , தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் புது வாழ்வு திட்டம் மூலம் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு வாழ்வாதார நிதி வழங்குதல் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு அமுத சுரபி நிதி வழங்குதல் இளைஞர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பு பயிற்சிக்கு பின் வேலை வாய்ப்பு மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலிவுற்றோர்களுக்காக வாழ்வாதார நிதி உதவி செய்தல் போன்ற பல்வேறு பணிகளின் முன்னேற்றம் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார். இந்த நிதியாண்டில் எடுக்கப்பட்ட அனைத்துத் திட்டப்பணிகளையும் விரைந்து செயல்படுத்தி, அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவுரை வழங்கப்பட்டது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டப்பணிகளையும் தரமானதாகவும், திட்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்கு இணங்கவும், உரிய காலக் கெடுவிற்குள்ளும் மக்கள் பயன்பெறத்தக்க வகையில் நிறைவேற்ற அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவேண்டும் என அறிவுரை வழங்கப்பட்டது.

மேலும், மாண்புமிகு அம்மா அவர்களால், சட்டமன்ற விதி எண்110ன் கீழ் அறிவிக்கப்பட்ட அனைத்து திட்டப்பணிகளையும் விரைந்து செயல்படுத்தி, காலதாமதமின்றி மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரவேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவுரை வழங்கப்பட்டது

இந்த ஆய்வுக் கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயலர் திரு. ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., திரு. கா.பாஸ்கரன், இ.ஆ.ப., இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள், ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர்கள் , மகளிர் திட்டம் மற்றும் புது வாழ்வு திட்டம் கூடுதல் இயக்குநர்கள் கண்காணிப்பு பொறியாளர் (ஊரக வளர்ச்சி) ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9